**பள்ளிக்கல்வித் துறை – விழுப்புரம் மாவட்டம்**

காலாண்டுப் பொதுத்தேர்வு – 2024-25

**வகுப்பு 12 பொருளியல் விடைக்குறிப்பு**

**பகுதி – I** 20 X 1=20

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ | ஜே. எம். கீன்சு | 1 |
| 2 | ஆ | அமெரிக்கா | 1 |
| 3 | இ | நான்கு துறை மாதிரி | 1 |
| 4 | ஈ | வருமானம் | 1 |
| 5 | இ | GDP | 1 |
| 6 | ஆ | பொருளாதார நலன் | 1 |
| 7 | அ | அங்காடி விதி | 1 |
| 8 | ஈ | சேமிப்பு | 1 |
| 9 | அ | 0.8 | 1 |
| 10 | அ | 1 | 1 |
| 11 | அ | J R ஹிக்ஸ் | 1 |
| 12 | இ | மும்பை | 1 |
| 13 | அ | மைய பணவியல் அமைப்பு | 1 |
| 14 | ஆ | சட்டப்படியான பணாளிப்பு | 1 |
| 15 | அ | பணவியல் | 1 |
| 16 | அ | 500 மற்றும் 1000 | 1 |
| 17 | ஆ | அயல் நாட்டுச் செலவாணி | 1 |
| 18 | இ | அ மற்றும் ஆ | 1 |
| 19 | அ | தாள் தங்கம் | 1 |
| 20 | ஈ | சுங்கவரி ஒன்றியம் | 1 |

Vpm/Qtly2024/Eco/1

**பகுதி – II** 7 X 2 =1 4

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 21 | பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும்.<br><br>அல்லது<br><br>பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தங்களாகிய நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு, நாட்டு உற்பத்தி முதலானவற்றை உள்ளடக்கியது. | 2 |
| 22 | வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். இது, பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும். | 2 |
| 23 | அங்காடி விலையில் GNP = C+ I + G + (X-M) + (R-P) | 2 |
| 24 | பணமதிப்பு அடிப்படையில் கணக்கிடப்பட்ட GDPயை உண்மை GDP யால் வகுத்து, 100 ஆல் பெருக்கினால், GDP குறைப்பானைக் கணக்கிடலாம்.<br><br>GDP குறைப்பான் = பணமதிப்பு GDP / உண்மை GDP x 100. | 2 |
| 25 | 1. ஒரு தனி வாங்குபவரோ, விற்பவரோ அல்லது உள்ளீடு பொருளோ விலையை மாற்ற முடியாது.<br>2. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.<br>3. முழு வேலை நிலை நிலவும். (ஏதேனும் இரண்டு). | 2 |
| 26 | வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணிதரீதியாக APC = C / Y இங்கு C - நுகர்வு Y- வருமானம் | 2 |
| 27 | நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் (Plastic Money) உருவாக்கப் பட்டிருப்பதால் இது நெகிழிப் பணம் என்று அழைக்கப்படுகிறது. எ.கா:ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, | 2 |
| 28 | பண மாற்று வீதத்தை அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் என்றும் குறிப்பிடலாம். “ஒரு நாட்டின் பணத்தை மற்ற நாட்டுப் பணமாகவும் பிற நாட்டின் பணத்தை ஒரு நாட்டிற்கு மாற்றும் முறையே செலாவணி மாற்று வீதம் ஆகும். | 2 |
| 29 | தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காகத் துவக்கப்பட்ட அமைப்பு ( SAARC) ஆகும். நேபாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஜனவரி 16, 1987இல் செயல்படத் துவங்கியது. | 2 |

| | | |
|---|---|---|
| 30 | அ) ரொக்க இருப்பு விகிதம்: வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும். இதுவே, ரொக்க இருப்பு விகிதம் எனப்படுகிறது.<br><br>ஆ) சட்டப்படியான நீர்மை விகிதம்: வங்கிகள் தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம், ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மமைத் தன்மை கொண்ட சொத்துகள் ஆகும். | 2 |

**<u>பகுதி – III</u>** 7 X 3 =21

**<u>ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.</u>**

| | | |
|---|---|---|
| 31 | 1. அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும்<br>2. எதிர்ககால சிக்கல்களைப் புரிந்துக் கொள்ளவும், வருங்ககாலத் தேவைகளையும், அறைகூவல்களையும் எதிர்கொள்வதற்கும்,<br>3. நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறியவும்.<br>4 பொருளாதாரக் குறியீடுகளைப் பகுத்ததாயவும் அவற்றை ஒப்பிடவும்<br>5. பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், எதிர்க்காலத்தில் நடக்கவிருப்பனவற்றை முன்கணிக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. (ஏதேனும் 3 மட்டும்) | 3 |
| 32 | தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக்கிடைப்பது தலா வருமானம்.<br>தலாவருமானம் = ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்<br>------------------------------------------------<br>அதே ஆண்டின் மக்கள் தொகை | 3 |
| 33 | காரணி செலவில் நிகர நாட்டு வருமானத்தை பெறுவதற்கு, அங்காடி விலையில் NNP யின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழித்து, மானியங்களைக் கூட்ட வேண்டும்.<br>காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி மானியம + | 3 |
| 34 | 1. கீன்சின் கோட்பாடு, முழுவேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் வாய்ப்பு இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.<br>2. கீன்சின் கோட்பாடு ஒரு பொதுக்கோட்பாடாகவே திகழ்ந்தது.<br>3. கீன்சின் கருத்துகள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன.<br>4. கீன்சின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டின்படி மொத்தச் செலவு, நாட்டு | 3 |

| | | |
|---|---|---|
| | உற்பத்திக்கும், நாட்டு வருமானத்திற்கும் சமமாக இருக்கும<br>ED = Y = C + I = வெளியிடு வேலைவாய்ப் = (உற்பத்தி)பு | |
| 35 | கீன்சு கோட்பாட்டின் படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் அதுவே தொகு தேவையாகும். இது கீழ்க்ககாணும் நான்கு பகுதிகளைக் கொண்டது.<br><br>1. நுகர்வுத் தேவை 2. முதலீட்டுத் தேவை 3. அரசுச் செலவு 4. நிகர ஏற்றுமதி-இறக்குமதி. | 3 |
| 36 | **தன்னிச்சையான முதலீடு** — **ஊக்குவிக்கப்பட்ட முதலீடு**<br>தன்னிச்சையானது — திட்டமிடப்பட்டது<br>வருவாயைப் பொருத்து நெகிழாதது — வருவாயைப் பொருத்து நெகிழ்வது<br>நல நோக்கமுடையது — இலாப நோக்கமுடையது | 3 |
| 37 | 1. ரொக்க வைப்பு விகிதம<br>2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்<br>3. ரொக்க இருப்பு விகிதம்<br>4. சட்டப்படியான நீர்மை விகிதம். ( விளக்கதுடன்). | 3 |
| 38 | 1. நபார்டு வங்கி அனைத்து வகையான உற்பத்திக்காகவும் முதலீட்டுக்காகவும் வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.<br>2. இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால, நீண்டகால கடன்களை வழங்குகிறது.<br>3. கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.<br>4. மைய அரசினால் அங்கீகரிக்கப்பட் நிறுவனங்களுக்கு நீண்டகால கடனை அளிக்கிறது.<br>5. மைய, மாநில அரசுகளின் சிறுதொழில்கள் -, குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயலாற்றும் நடவடிக்கைகளை நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.<br>6. நபார்டு வங்கி, அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியைச் செய்கிறது. ( ஏதேனும் 3 விளக்கத்துடன் ) | 3 |
| 39 | சார்க்கின் பணிகள்:<br>1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்<br>2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்கு தீர்வுகாணுதல்<br>3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல் | 3 |

| | | |
|---|---|---|
| | 4. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது<br>5. பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது | |
| 40. | (table below) | 3 |

| MPC | MPS | K |
|---|---|---|
| 0.00 | 1.00 | 1 |
| 0.10 | 0.90 | 1.11 |
| 0.50 | 0.50 | 2.00 |
| 0.75 | 0.25 | 4.00 |
| 0.90 | 0.10 | 10.00 |
| 1.00 | 0.00 | α |

**பகுதி – IV** 7 X 5 = 35

**அனைத்து வினாவிற்க்கும் விரிவான விடையளிக்கவும்:**

41 அ (5)

பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமதருமப் பொருளாதாரம் | கலப்பு பொருளாதாரம் |
|---|---|---|---|
| உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் உரிமையும் பொதுத்துறை உரிமையும் |
| பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலனும் மற்றும் இலாப நோக்கமும் |
| மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| அரசின் பங்கு | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| வருமானப்பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியாரும் மற்றும் அரசு நிறுவனங்களும் |
| பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை | சமமின்மையும் திறனின்மையும் |

ஆ. நாட்டு வருமான பகுத்தாய்வின் முக்கியத்துவம். ஏதேனும் 5 முழு 5

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| | விள்க்கத்துடன். | |
| 42<br>அ | 1. உற்பத்தி முறை<br>2. வருமான முறை<br>3. செலவு முறை<br>( முழு விளகத்துடன் ) | 1<br>1<br>1<br>2 |
| ஆ | 1. நாட்டு வருமானம் 2. பண வீக்கம். 3. வணிகச் சுழற்சி. 4. வறுமையும் வேலையின்மையும். 5. பொருளாதார வளர்ச்சி<br>( முழு விளகத்துடன் ) | 5 |
| 43<br>அ | ADF மற்றும் ASF – ன் சமநிலை:<br>கீன்சின் வேலை வாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF ஆகியவற்றின் சமநிலையை விளக்க, குடும்பங்கள் வணிகம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தொகு தேவையும், தொகு அளிப்பும் 'E' எனும் புள்ளியில் சமநிலை அடைகின்ிறன. இப்புள்ளியில் வேலை வாய்ப்பு No ஆக இருக்கும் .ON1 அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு N1 R1 ஆக இருக்கும்.<br>வரைபடம் – 2 மதிப்பெண்<br>விளக்கம் – 3 மதிப்பெண் | 5 |
| ஆ | (see table below) | 5 |

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI) |
|---|---|
| 1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொருத்து அமைகிறது | 1) மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையைத் தூண்டும் மாற்றத்தைப் பொருத்து அமைகிறது. |
| 2) ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | 2) ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| 4) இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock) | 4) இது ஒரு தடையா ஓட்டக் (FLOW) கருத்துரு |
| 5) ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | 5) கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

| | | |
|---|---|---|
| 44<br>அ | 1. வணிகச் சுழற்சியின் பொருள் மற்றும் இலக்கணம் –<br>2. வணிகச் சுழற்சியின் கட்டங்கள் | 2<br>2 |

www.Padasalai.Net

<table>
<tr><td>ஆ</td><td>3. வரைபடம் மற்றும் விளக்கம்<br><br>பெருக்கி: நாட்டு வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை 'பெருக்கி' என வரையறுக்கலாம்.<br>பெருக்கி K =ΔY/ΔI.<br>பெருக்கி செயல்படும் விதம் எடுத்துகாட்டுடன் விளக்குதல்.</td><td>1<br><br>2<br><br>3</td></tr>
<tr><td>45<br>அ<br><br>ஆ</td><td>இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் ஏதேனும் 5 மட்டும் விளக்கத்துடன்<br><br>
<table>
<tr><th>உள்நாட்டு வாணிகம்</th><th>பன்னாட்டு வாணிகம்</th></tr>
<tr><td>ஒரு நாட்டிற்குள் மக்களுக்கும், நிறுவனங்களுக்குமிடையேயும் நடைபெறும் வாணிகம்</td><td>பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம்</td></tr>
<tr><td>உழைப்பும், மூலதனமும் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல்</td><td>உழைப்பும் மூலதனமும் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது</td></tr>
<tr><td>பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை</td><td>பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி, பங்களவு முதலான தடைகள் கடினமாக்குகின்றன.</td></tr>
<tr><td>விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது</td><td>பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.</td></tr>
<tr><td>புவி அமைப்பும் கால நிலைச் சூழலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்</td><td>புவி அமைப்பும் கால நிலையும் வேறுபடும் இயல்பு கொண்டவை</td></tr>
</table>
<br>ஏதேனும் 5 மட்டும்.</td><td>5<br><br>5</td></tr>
<tr><td>46<br>அ<br><br>.<br>ஆ</td><td>1. சார்க் அமைப்பின் நோக்கங்கள், பணிகள், சாதனைகள்.<br>2. பிரிக்ஸ் நோக்கங்கள். பணிகள், சாதனைகள்.<br>பணத்தின் பணிகள்:<br>1. முதல்நிலைப் பணிகள் 2. இரண்டாம் நிலைப் பணிகள்<br>3. துணைப்பணிகள் 4. இதர பணிகள</td><td>3<br>2<br><br>5</td></tr>
<tr><td>47<br>அ</td><td>பன்னாட்டுப் பண நிதியத்தின் குறிக்கோள்கள்:<br>1. உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டுப் பறிமாற்றத்தில் பணவியல் ஒத்துழைப்பைப் மேம்படுத்துவது<br>2. பன்னாட்டு வணிகம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.<br>3. உறுப்பு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பண</td><td>5</td></tr>
</table>

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | | |
|---|---|---|
| | மதிப்பிறக்கம் செய்வதைத் தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்.<br>4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல்‘<br>5. அனைத்து நாடுகளுக்கிடையிலான பலதரப்பு நடப்புக் கணக்கு பண பறிமாற்ற முறை ஆகியவற்ற நிறுவுவது<br>6. வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் மூலதனம் செய்வதை எளிதாக்குவதன் மூலம் வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது.<br>7. பன்னாட்டு நீர்மை சிக்கலுக்குத் தீர்வு காண்பது.<br>(ஏதேனும் 5 மட்டும்) | |
| ஆ | வேலையின்மையின் வகைகள்:<br>1. வணிகச் சூழல் வேலையின்மை 2. பருவகால வேலையின்மை 3. தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை<br>4. கற்றோர் வேலையின்மை 5. தொழில் நுட்ப வேலையின்மை<br>6. அமைப்புசார் வேலையின்மை 7. மறைமுக வேலையின்மை.<br>(ஏதேனும் 5 மட்டும்) | 5 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com